**O.S.No. 174/2012**

**PW1 :** சுப்புலட்சுமி தேதி 09.09.2025

**வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் திண்டலில் குடியிருக்கிறேன். எனக்கு திருமணத்திற்கு பின்னிட்டு திண்டலில் குடியிருக்கிறேன். திருவேங்கடம்பாளையம் புதூர் என் பெற்றோர் ஊர். எனக்கு திருமணமாகி 50 வருடத்திற்கு மேல் இருக்கும் என்றால் அதை என்னால் சொல்ல இயலாது. எனக்கு 13 வயதில் திருமணம் ஆனது. தற்போது வயது எனக்கு தெரியாது. என் கணவருக்கு எவ்வளவு சொத்து இருந்தது என்றால் 5 ஏக்கர் இருந்தது. என் மாமனாருக்கு 10 ஏக்கர் இருந்ததில் என் கணவருக்கும் என் கொழுந்தானாருக்கு தலா 5 ஏக்கர் பிரிந்தது. ஆரம்ப காலத்தில் தரிசாக இருந்தது அதன் பிறகு வாய்க்கால் பாசன வசதி ஏற்பட்டது. என் தந்தை பெயர் நாச்சிமுத்து கவுண்டர். நாச்சியப்பகவுண்டர் என்றும் அழைப்பார்கள். என் அப்பாவின் அப்பா பெயர் சின்னராமணகவுண்டர். ராமணகவுண்டர் என்றும் அழைப்பார்கள். என் அம்மா பெயர் அம்மணியம்மாள் என்ற ராமாயம்மாள். நான் இவ்வழக்கை யார் மீது தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் என் உடன் பிறந்த சகோதரர்கள் மற்றும் அவர்கள் வாரிசுகள் மீது தாக்கல் செய்திருக்கிறேன். என் தந்தை பவளாத்தாம்பாளையத்தில் இறந்து விட்டார். என் பெற்றோர்கள் பவளாத்தாம்பாளையத்தில் தான் குடியிருந்தார்கள். இறக்கும் வரை என் பெற்றோர் பவளாத்தாம்பாளையத்தில் குடியிருந்தார்கள். என் அம்மாவுடன் நான் போக்குவரத்தில் இல்லை என்றால் சரியல்ல நான் போவேன். என் அம்மாவின் இறப்பிற்கு நான் போகவில்லை என்றால் சரியல்ல நான் போனேன். பல வருடங்களாக என் பெற்றோருடன் நான் சண்டையிட்டு கொண்டு அவர்கள் வீட்மடிற்கு போகவில்லை என்றால் சரியல்ல. நானும் என்

கணவரும் என் அப்பாவை காயப்படுத்திவிட்டோம் என்றால் சரியல்ல. என் பெற்றோர்கள் மாடு வியாபாரம் செய்வார்கள் சந்தைக்கு சென்று மாடுகளை வாங்கி விற்பார்கள். அதன் மூலம் வருமானம் ஈட்டினார் என்றால் சரிதான். என் தாத்தா சின்னராமணகவுண்டரும் அவருடைய மனைவி ராமாயி அவர்களும் சந்தையில் மாட்டு வியாபாரம் செய்தார்கள் என்றால் சரிதான். அதில் வருமானம் வந்தது என்றால் சரிதான். அந்த வியாபாரத்தில் வந்த பணத்தை கொண்டு என் பாட்டனார் மற்றும் என் தந்தை நிலத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். தாவா அ அயிட்ட சொத்துக்களை நான் பூர்வீக சொத்து என்று சொல்லியிருக்கிறேன். அது பூர்வீக சொத்து என்பதை காட்ட ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். சின்னராமணகவுண்டருக்கும் என் தந்தைக்கும் சொத்து எவ்வாறு வந்தது என்று ஊரில் உள்ளவர்களுக்கு தெரியும் என்று சொன்னால் தெரியும். என் அப்பா சின்னராமணகவுண்டருக்கு ஒரே ஆண் வாரிசு என்றால் சரிதான். 3 பெண் வாரிசுகள் உள்ளார்கள். மேற்படி 3 பெண் வாரிசுகளை குறித்து இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்கள் 60 – 70 வருடத்திற்கு முன்பாகவே இறந்து விட்டார்கள். ஏ செட்யூல் அயிட்டம் 1 சுள்ளிக்காட்டு தோட்டம் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 4 – 5 ஏக்கர் இருக்கும். சுள்ளிக்காடு தோட்டம் பூர்வீக சொத்து என்று சொல்கிறேன். அது யார் வாங்கினார்கள் அது எவ்வாறு எங்கள் குடும்பத்திற்கு வந்தது என்று தெரியாது. என் தாத்தா சின்னராமணகவுண்டர் 5.6.1933 ல் சர்வே எண்.558 ல் 91 சென்டை கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். பாவாயம்மாள் 7.6.1950 ல் ச எண்.557 ல் 1 ஏக்கர் 97 சென்ட் விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். அதில் பாவாயம்மாள் 50 சென்ட் நிலத்தை விற்று விற்றார் என்றால் சரியல்ல என் அப்பா தான் விற்றார். அதை யார் கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. பாவாயம்மாள் கிரையம் வாங்கியதில் 50 சென்ட் பாவாயம்மாள் விற்று வி டடார் என்றால் சரியல்ல

அதற்கு முன்பாகவே 1950 லேயே இறந்து விட்டார். விற்றது போக 1 ஏக்கர் 47 சென்ட் தான் பாவாயம்மாளுக்கு இருந்தது என்றால் சரிதான். சுள்ளிக்காட்டில் உள்ள வீடுகள் எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் ஞாபகத்தில் இல்லை. அதற்கு குடிநீர் இணைப்பு வாங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. கெம்மநாயக்கன் காடு பூர்வீக சொத்து என்று சொல்கிறேன். அது யார் பெயரில் முதன் முதலில் இருந்து என்றால் சின்னராமணகவுண்டர் பெயரில் இருந்தது. 5.6.1933 ல் சின்னராமணகவுண்டர் கெம்மநாயக்கன் காட்டை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை என் சகோதரர்கள் எதிர் வாதத்தில் சொல்லியுள்ளார்கள் என்றால் தெரிந்து கொண்டேன். கெம்மநாயக்கன் காட்டிற்கு பழைய சர்வே எண் 558 என்றால் எனக்கு தெரியாது. அதில் கிணறு மற்றும் போர் உள்ளது என்றால் சரிதான். போர் எத்தனை உள்ளது என்று எனக்கு தெரியாது. யார் போட்டார்கள் என்று தெரியாது. ஓடைக்காடு எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 1 ஏக்கருக்கு குறைவாக இருக்கும். அது யார் பெயரில் கிரையம் இருந்தது என்று எனக்கு தெரியாது. அது எவ்வாறு என் தாத்தாவிற்கு வந்தது என்று தெரியாது. பரையன்காடு எவ்வளவு ஏக்கர் என்றால் 1 ½ ஏக்கர் பூமி. அது யாரிடம் இருந்து வந்தது என்று எனக்கு தெரியாது. 26.2.1922 ம் தேதியில் பச்சாநாவிடன் என்பவரிடம் இருந்து 1 ம் பிரதிவாதி என் அப்பா கிரையம் வாங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது. பள்ளக்காட்டு தோட்டம் எத்தனை பேருக்கு பாத்தியம் என்றால் 3 பேருக்கு பாத்தியப்பட்டது. 1/3 பங்கு சுமார் 1 ½ ஏக்கர் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. பள்ளக்காட்டு தோட்டம் 14.6.1961 ல் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான் என் அப்பா வாங்கினார். 1969 ல் சென்னியப்பன், குழந்தைசாமி, ஆயிக்கவுண்டர் ஆகியோர் பிரிவினை செய்து கொண்டார்கள். பள்ளக்காட்டு தோட்டம் என்பது 3 இடத்தில் சொத்துகள் உள்ளது. என்னுடைய சொத்து விவரத்தில் 3 இடத்தில் சொத்துக்கள்

இருப்பதாக தனித்தனியாக சொல்லவில்லை என்றால் ஞாபகத்தில் இல்லை. புதூர் ஊர்காட்டில் உள்ள வீடு என் அப்பாவிற்கு அரசாங்கத்தில் பட்டா கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. பட்டா எண் 257 என்றால் தெரியாது. அது நத்தம் புறம்போக்கு அரசாங்கத்தால் பட்டா கொடுக்கப்பட்டது அதில் நான் பங்குரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. பூர்வீக சொத்துக்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. கிரையம் வாங்கிய சொத்துக்கள் அதற்கான ஆவணங்கள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மாடு வியாபாரம் செய்ததில் என் அப்பா கிரையம் வாங்கிய சொத்துகள் என்பதால் என் அப்பாவின் சுயார்ஜித சொத்துகள் என்றால் சரியல்ல. தாவா ஏ செட்யூல் 2ம் அயிட்ட சொத்தில் பள்ளக்காட்டு தோட்டம் 5 ம் சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றும் ஒரே சொத்தை இரண்டு இடத்தில் சொத்து விவரத்தில் தவறாக காட்டியிருக்கிறேன் என்றால் சரிதான். ஏ செட்யூல் அயிட்டம் 2 ல் ரீ.ச.எண். 479/1 – 17 என்று நான் சொல்லியிருக்கும் சொத்து விவரம் தவறானது என்றால் அது எனக்கு தெரியாது. பி செட்யூல் அரசன்காடு அருகே எனக்கு பூமி உள்ளது. அரசன்காடு என் பெற்றோர்கள் சேர்ந்து 16.4.1947 ல் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். 24.3.1992 ல் அந்த காட்டை என் அப்பா என் அண்ணன் 3ம் பிரதிவாதி சண்முகத்திற்கு 2 ஏக்கர் 45 சென்டை செட்டில்மென்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். என் அம்மா அதே தேதியில் சண்முகத்தின் மகன் 4 ம் பிரதிவாதி செந்தில்குமாருக்கு 2 ஏக்கர் 45 சென்டை செட்டில்மென்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. கிரைய ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்ற சொத்துகளை அவரவர் அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். சின்னராமணகவுண்டர் இறந்து பிறகு என் அப்பாவிற்கு அந்த சொத்துக்கள் வந்தது என்றால் சரிதான். சின்னராமணகவுண்டர் பெயரில் இருந்த சொத்து என் அப்பாவிற்கு வந்ததால் என் அப்பாவிற்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என் பாட்டி பெயரில்

உள்ள சொத்து அவர் இறந்த பின்னிட்டு என் அப்பாவிற்கு வந்தது என்றால் சரிதான். சின்னராமமணகவுண்டர் மற்றும் அவருடைய மனைவி பாவாயம்மாளின் சொத்துகள் அனைத்தும் நாச்சிமுத்து கவுண்டருக்கு வந்ததால் அவருடைய தனிப்பட்ட சொத்துகள் என்றால் சரியல்ல. அதில் நான் எவ்வித பாகமும் கோர இயலாது என்றால் சரியல்ல. 1992 ல் 2 தானசெட்டில்மென்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. 2011 ல் 2 தானசெட்டில்மென்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. தெரிந்திருந்தால் அப்போதே பங்கு கேட்டிருப்பேன். தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் படி பெற்றவர்கள் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி சண்முகத்திற்கு எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் ஒரு பகுதியை அவர் மகள் மாலதிக்கு அவர் ஒரு பகுதியை தானசெட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் மேற்படி தானசெட்டில்மென்ட் எழுதி வைத்த பிறகு தான் மேற்படி விவரம் தெரிய வந்தது. சண்முகம் அவருக்கு தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் வந்த சொத்தில் ஒரு பகுதியை விற்று விட்டார் என்றால் சரிதான். கிரையம் பெற்றவர்கள் 7 மற்றும் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பூர்வீக சொத்து எதுவும் இல்லை என்றும் அவருடைய சுயார்ஜித சொத்துகள் மட்டும் இருந்தது என்றால் சரியல்ல. சின்னராமமணகவுண்டர் எப்போது இறந்தார் என்றால் 1916 ல் இறந்திருக்கலாம். தாவா சொத்தில் நான் கூட்டு பங்குதாரர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எந்த காலத்தில் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. அந்த சொத்துகளில் எனக்கு எந்த பங்குரிமையும் இல்லை என்றும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. தானசெட்டில்மென்ட் பத்திரங்களை என் அப்பா

சார்பதிவாளர் அலுவலத்தில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். என் பேத்தி 7 ம் பிரதிவாதியின் பெயரில் எழுதி வைத்த பிறகு தான் எனக்கு தெரிய வந்தது. மாலதிக்கு அவர் தந்தை 3 ம் பிரதிவாதி 12.12.1997 எழுதிய பிறகு தான் எனக்கு தெரிய வந்ததா என்றால் சரிதான். கூட்டு குடும்ப உறுப்பினாராக நான் இல்லை என்றும் கூட்டு குடும்ப சொத்து அல்ல என்றும் 1 ம் பிரதிவாதி எதிர் வழக்குரையில் சொல்லியிருக்கிறார் என்றால் சரியல்ல. நான் என் தந்தை கூட்டு குடும்பத்தின் தலைவர் என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் அனைத்திலும் எனக்கு பங்குரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் 1 ம் பிரதிவாதிக்கு கிரையம் பெற்ற வகையில் சுயார்ஜித சொத்துகள் என்றும் அதை பொறுத்து ஆவணம் எழுதி வைக்க உரிமை உடையவர் என்றும் அவர் சொத்தில் நான் பங்கு கோர இயலாது என்றால் சரியல்ல. என் தாயார் பெயரில் உள்ள சொத்துகள் அவருடைய தனிப்பட்ட சொத்துகள் என்றும் அதன் படி அவர் 4 ம் பிரதிவாதியான பேரன் செந்தில்குமாருக்கு அவர் விருப்பத்தின் பேரில் எழுதி வைத்ததில் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. என் பெற்றோர் பதிவாளர் பத்திர அலுவலத்திற்கு சென்று தானசெட்டில்மென்ட் எழுதி வைத்தார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என் பெற்றோர்கள் நல்ல திடகாத்திரமாக நல்ல மனநிலையில் தானசெட்டில்மென்ட் பத்திரங்கள் எழுதி வைத்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. என் பெற்றோர் பவளத்தாம்பாளையத்தில் உள்ள வீட்டில் குடியிருந்ததற்கான ரேசன் அட்டை, வாக்காளர், வங்கிகணக்கு புத்தகம் ஆகியவை 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என் பெற்றோர்கள் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் எழுதி வைத்தார்கள் என்றால் ஆம் எழுதி வைத்துள்ளார்கள். இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. சொத்துக்கள் பூர்வீக சொத்துகள் எதுவும் இல்லை என்றும் பூர்வீக

சொத்தின் வருமானத்தை கொண்டு என் தாத்தா என் அப்பா கிரையம் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகளின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**( 7 ம் பிரதிவாதி தரப்பில் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தழுவி ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**